பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 100

வியாழக்கிழமை
06 மார்ச் 2025

மாசி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## யாழ். – திருச்சி விமான சேவை!

யாழ்ப்பாணம், மார்ச் 6
யாழ்ப்பாணத்துக்கும் திருச்சிக்கும் இடையிலான விமான சேவையை (இண்டிகோ) எதிர்வரும் 30ஆம் திகதி முதல் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள் 09

# வடமாகாண மீனவர்களின் நம்பிக்கையைக் காப்போம்

## அமைச்சர் சந்திரசேகர் வாக்குறுதி



கொழும்பு, மார்ச் 6
வடமாகாண மீனவர்கள் எமது அரசாங்கம் மீது வைத்துள்ள நம்பிக்கைக்குக் கடுகளவேனும் தீங்கு விளைவிக்க மாட்டோம். கடற்றொழிலாளர்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படும் என்று கடற்றொழில், அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். 11

## போதை மாபியாவின் பின்புலம் இராணுவமே!

நாடாளுமன்றத்தில் நேற்று கஜேந்திரகுமார் எம்.பி. கடும்பிடி

விரிவு :- பக். 11

## அத்துமீறுதலைத் தடுத்தால் தமிழர்களுக்குப் பேருதவி!

### இந்தியாவுக்கு அமைச்சர் பிமல் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 6
இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைவதைதுபு தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை இந்தியா முன்னெடுக்கவேண்டும். அவ்வாறு செய்தால், அதுவே வடக்கு மக்களுக்கு அவர்கள் வழங்கும் பெரும் சேவையாகவும், பேருதவியாகவும் அமையும் என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க 11

## ‘கட்’ வெட்டு மாணவர்களுக்கு ‘கெட் அவுட்’ சொன்ன அதிபர்!

யாழ்ப்பாணம், மார்ச் 6
வித்தியாசமான சிகை அலங்காரங்களுடன் ('கட்' வெட்டு முடியலங்காரத்துடன்) பாடசாலைக்கு வந்த மாணவர்களை, சிகை அலங்காரங்களை சீர்செய்து வருமாறு அதிபரொருவர் திருப்பி அனுப்பியுள்ளார்.
யாழ்ப்பாணம் நகரப் பகுதிக்கு அண்மையில் உள்ள பிரபல பாடசாலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சைக்குத் 09

### பாதுகாப்பில்லாமல் வைக்கப்பட்டிருந்த

## மாத்திரைகளை உட்கொண்ட ஆண்குழந்தை பரிதாபச்சாவு!

முல்லைத்தீவு, மார்ச் 6
முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டிருந்த மாத்திரைகளை எடுத்து 11

## முல்லைத்தீவு, மன்னாருக்கு விரைவில் தீயணைப்புப்பிரிவு

### 60.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

முல்லைத்தீவு, மார்ச் 6
முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் தீயணைப்புப் பிரிவை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக உலக வங்கியின் உதவியுடன் 60.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட் 11

### லஞ்சம் மற்றும் மோசடிக்காக

## பொலிஸ் அதிகாரியொருவரின் மகனுக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 6
யாழ்ப்பாணம் பொலிஸ் உயரதிகாரியொருவரின் மகன், தனது பொலிஸ் பின்புலச் செல்வாக்கைப் பயன்படுத்தி லஞ்சம் வாங்கினார் என்று யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.
குறித்த நபர் 11

### வடக்கின் பெரும் போர் பொன் அணிகளின் போர்

## பிற்போடப்பட்டிருந்த ஆட்டங்கள் இன்று!

யாழ்ப்பாணம், மார்ச் 6
காலநிலை காரணமாக பிற்போடப்பட்டிருந்த வடக்கின் போர் மற்றும் பொன் அணிகளின் போர் கிரிக்கெட் ஆட்டங்கள் இன்று இடம்பெறவுள்ளன.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான வடக்கின்போர் துடுப்பாட்டப் போட்டியும், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் 11

## யாழ். பல்கலைக்கழகப் பேரவை: புதிய உறுப்பினர்கள் நியமனம்

### இம்முறையும் அரசியல் தலையீடு?

யாழ்ப்பாணம், மார்ச் 6
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வெளிவாரி பேரவையின் உறுப்பினர்களாக 16 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில செனவிரத்னவினால், பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி 11



பூச்சந்தி பூராளி

‘தொப்புள்கொடியள் அத்துமீறினால் ஆரையும் கொண்டுதான் அறுக்கோணும் கண்டியளோ’

## பெண் ஊழியரிடம் சங்கிலி அறுப்பு!

### இரண்டு மணிநேரத்தில் சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 6
வடமராட்சி வல்லைவெளிப் பகுதியில் வைத்து பெண் ஊழியர் ஒருவரின் தங்கச் சங்கிலி நேற்று அறுக்கப்பட்ட நிலையில், சந்தேகநபர்களில் ஒருவர் 11

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் சிறையிலுள்ளோரை விடுவிக்குக

### ஐ.நா.வில் இலங்கை அரசாங்கத்துக்கு இணையனுசரணை நாடுகள் அழுத்தம்

கொழும்பு, மார்ச் 6
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 05.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4008 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 33 34 46 57 |
| விசேட எழுத்து | E |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 05.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1075 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 12 16 17 49 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 05.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 034 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 3 8 5 8 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 05.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2114 |
| ஆங்கில எழுத்து | R |
| சுப்பர் இலக்கம் | 25 |
| வெற்றி இலக்கங்கள் | 35 44 51 69 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 05.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5766 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 6 5 2 3 3 0 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 05.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1796 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 01 09 34 78 |
| விசேட எழுத்து | O |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 05.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 341 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 2 3 3 0 |

# வடக்கு மீனவர்கள் மீண்டெழ நடவடிக்கைகள் எடுக்கப்படும்

## பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 6**

**கடற்றொழிலாளர்களில் 25 சதவீதமானோர் வடக்கிலேயே உள்ளனர். அவர்களை மீண்டெழ வைப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாதீட்டின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கையில் உள்ள மீன்பிடித் துறைமுகங்கள் அனைத்தும் மேம்படுத்தப்படும். மயிலிட்டி துறைமுகத்தை மேம்படுத்துவதற்கு இந்தியா உதவி வழங்கியுள்ளது. குறிப்பாக வடக்கில் கடற்றொழிலுக்காக எமது அரசாங்கம் உரிய ஒதுக்கீடுகளை பாதீடு ஊடாக முன்னெடுத்துள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கடற்றொழிலாளர்களை மீண்டெழ வைப்பதற்கு நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும். எமது நாட்டில் கடற்றொழிலாளர்களில் 25 வீதமானோர் வடக்கில் உள்ளனர். எனவே பாதீட்டில் உரிய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலுக்குச் செல்லும்போது விபத்து ஏற்பட்டால் இழப்பீடு பெறமுடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

கடற்றொழிலாளர்கள் மற்றும் உபகரணங்களுக்குரிய புதிய காப்பீட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அது விரைவில் நடைமுறைக்கு வரும் - என்றார். (எ-44)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 05.03.2025 | புதன்கிழமை | 0474 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| Y | 8 0 2 0 9 1 | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | 05.03.2025 | தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| 2740 | R | 24 56 57 59 | |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 05.03.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| I | 12 36 41 46 | 4901 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 05.03.2025 | புதன்கிழமை | |
| தனுசு | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 06 38 48 54 | 4452 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | 05.03.2025 | தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Y | 08 | 09 31 48 58 | 1916 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 05.03.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| V | 36 42 71 74 | 2566 |

| JAYODA | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 05.03.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| P | 04 15 17 38 | 2109 |



# செவ்வந்தியை கண்டால் 12 இலட்சம்

கொழும்பு, மார்ச் 6

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த 'கணேமுல்ல சஞ்சீவ' வின் கொலையுடன் தொடர்புடைய பெண் சந்தேகநபரான இஷாரா செவ்வந்தியை கைது செய்வதற்கு தகவல் வழங்குபவர்களுக்குச் சன்மானமாக முதலில் 10 இலட்சம் ரூபா என அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது 12 இலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் எனப் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி கணேமுல்ல சஞ்சீவ புதுக்கடை நீதிமன்றில் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று வரும் நிலையில் பெண் சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார். இந்த நிலையில் அவரைக் கைதுசெய்வதற்கு உண்மையான தகவல்களைப் பொதுமக்களை வழங்குமாறு கோரி பொலிஸ் ஊடகப்பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. (ச-இ)

# புதிய மின்கட்டணத் திருத்தத்தால் சுமையாக மாறும் மின்சாரசபை

## சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 6

இலங்கை மின்சாரசபை கடந்த ஜனவரி மாதம் நாட்டின் மின்சாரக்கட்டணத்தை திருத்தத்தை மேற்கொண்டுள்ளது. மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான செலவு புதிய கட்டணத்தால் ஈடுகட்டப்படாது என்று சர்வதேச நாணய நிதியம் மதிப்பிட்டுள்ளது. இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் சார்பில் சிரேஷ்ட தூதுக்குழு பிரதானி பீற்றர் பிரூவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய கட்டணத்தின் கீழ் இலங்கை மின்சாரசபை எதிர்கொள்ளும் இழப்புகளைத் தடுக்க முடியாது என்பது தெளிவாகிறது. அதனால் இலங்கை மின்சாரசபையின் கடன்கள் மீண்டும் குவியும் அபாயம் உள்ளதால், இலங்கை மின்சார சபை மீண்டும் அரசாங்கத்திற்கு சுமையாக மாறும்.

இலங்கை மின்சார சபை அரசாங்கத்துக்கு எவ்வளவு சுமையாக இருக்கும் என்பதில் அனைவருக்கும் அனுபவம் உள்ளதால், வரவிருக்கும் மின்சார கட்டணத் திருத்தத்தில் செலவு ஈடுகட்டும் மின்சார விலையை மீண்டும் நிர்ணயிப்பது அவசியமாகும். இழப்புகளை ஏற்படுத்தாத வகையில் விலைகளை நிர்ணயிப்ப தற்கான தானியங்கி வழிமுறைகள் ஏற்கனவே உள்ளன. அவை செயல்பட அனுமதிக்கப்பட வேண்டும்- என்றார். (எ-இ)



# தனிவழியில் விமல் களம்

கொழும்பு, மார்ச் 6

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தமது கட்சி தனித்துப் போட்டியிடவுள்ளது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல்வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மழை பெய்யும்வேளை ஒதுங்கித்தான் இருக்கவேண்டும். அவ்வாறுதான் பொதுத்தேர்தலின்போது ஒதுங்கிஇருந்தோம். தற்போது மழை ஓய்ந்துவிட்டது. களத்துக்கு வந்துவிட்டோம் கூட்டணி தொடர்பில் பேச்சு நடத்தப்படவில்லை- என்றார். (ச-44)

# பொலிஸாருடன் தகராறு; சந்தேகநபருக்கு மறியல் நீடிப்பு

கொடிகாமம், மார். 6

கடந்தமாதம் நடைபெற்ற வரணி மத்திய கல்லூரியின் விளையாட்டுப் போட்டியின்போது, மாணவர்களை வீடியோ எடுத்து, பாதுகாப்புக் கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தருடன் தகராறில் ஈடுபட்ட சந்தேகநபருக்கு இம்மாதம் 18 ஆம் திகதி வரை விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் கடந்த 3 ஆம் திகதி திங்கட்கிழமை கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். மறுநாள் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அதன்பிரகாரம் விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளாரென தெரிவிக்கப்பட்டது. (ச- 25, 159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இறுதி யுத்தத்தின்போது

# மக்களுக்குச் சென்ற உதவியை தடுத்து நிறுத்தியது இராணுவம்!

### முன்னாள் ஜனாதிபதி ரணில் ஒப்புதல்

**கொழும்பு, மார்ச் 6**

**முள்ளிவாய்க்காலில் இறுதிப் போர் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது, மக்களுக்கு உதவிகள் சென்றடைவதை இராணுவம் தடுத்து நிறுத்தியது என்று முன்னாள் ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார்.**

சர்வதேச ஊடகமான அல் ஜசீராவுக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் நேர்காணல் வழங்கியுள்ளார். அந்த நேர்காணலிலேயே, இறுதிப் போரின்போதும் அதற்குப் பின்னரும் இடம்பெற்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனைகள் மீது விமான தாக்குதல் இடம்பெற்றதையும் இந்த நேர்காணலில் வைத்து ரணில் ஒப்புக்கொண்டுள்ளார். எனினும், அவை தற்செயலாகத்தான் நடத்தப்பட்டன என்றும், திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல்கள் அல்ல என்றும் ரணில் கூறியுள்ளார்.

அமெரிக்காவால் பயணத்தடை விதிக்கப்பட்ட இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவை மீண்டும் தளபதியாக நியமித்தது ஏன்? என்ற கேள்விக்கு, 'தேர்தல் காலத்தில் பதவிகளை மாற்ற முடியாது' என்று ரணில் பதிலளித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படவில்லை. ஆதலால்தான், அவர் அரகலய போராட்டத்தின் பின்னர் நாடு திரும்பியபோது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் ரணில் மேலும் கூறியுள்ளார். (அ-ம-6)

# சாரதிகளுக்கு இனி ஆப்பு

கொழும்பு, மார்ச் 6

வீதிப்பாதுகாப்பை மேம்படுத்தவும் விபத்துகளைக் குறைக்கவும் பொலிஸார் உயர் தொழில்நுட்ப வேகத் துப்பாக்கிகளை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட இந்தச் சாதனங்கள், இரவில்கூட 1.2 கிலோமீற்றர் தூரத்தில் இருந்து வாகனங்களைக் கண்டறியும் திறன் கொண்டவை.

1.2 கிலோமீட்டர் தொலைவில் வரும் வாகனத்தின் வேகம், சாரதியின் புகைப்படம் மற்றும் வாகனத்தின் இலக்கம் உள்ளிட்ட பல தகவல்களைப் பெறமுடியும்.

இதன்மூலம் விதிமீறல்கள் தொடர்பில் பதிவுசெய்யப்படும் ஆதாரங்களை நீதிமன்றத்தில் சாட்சியாகச் சமர்ப்பிக்கமுடியும் என்று போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் வீதிப்பாதுகாப்புப் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணவல தெரிவித்துள்ளார். (ச-இ)

# குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதடி வீதியிலுள்ள வீடொன்றில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனிமையில் வசித்து வந்த இரு பிள்ளைகளின் தந்தையான வசந்தன் (வயது 41) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். சம்பவம் தொடர்பில் யாழ்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-125.20)

# செயன்முறை பரீட்சை

கொழும்பு, மார்ச் 6

க.பொ.த உயர்தரப் பரீட்சையின் (2024) உயிரியல் தொழில்நுட்பவியல் பாடத்துடன் தொடர்புடைய செயன்முறைப் பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 10ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் 7ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் எதிர்வரும் 10ஆம் திகதி வரை வகுப்புகளை நடத்துவது, ஒழுங்கமைப்பது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# எரிபொருள் விநியோகஸ்தர்களிடம் 5 மணிநேரம் வாக்குமூலம்!

கொழும்பு, மார்ச் 6

எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் துணைத்தலைவர் குசும் சந்தநாயக்க மற்றும் சாந்த சில்வா உள்ளிட்ட சிலர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியுள்ளனர். குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நேற்றுமுன்தினம் சுமார் 5 மணிநேரம் வாக்குமூலம் பெற்றுள்ளனர். அரசாங்கத்தை அவமானப்படுத்தும் நோக்கில், எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை சீர்குலைக்க இந்த பிரதிநிதிகள் முயற்சிக்கின்றனர் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே அவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. (எ-இ)




காலம் சரியில்லாட்டி உப்பு விக்கப் போனால் மழை கொட்டும், மா விக்கப் போனால் காத்தடிக்கும் எண்டு பழைய ஆக்கள் சொல்லுவினம். அப்பிடிக் காலம் கடுமையாக் கழுத்தறுத்தால் காத்தடிக்கப் போனாலும் 'பம்' வேலை செய்யேலை எண்டு பெற்றோல் செற்காரர் கையை விரிப்பினம். யாழ்ப்பாணத்தில உள்ள கனக்க பெற்றோல் செற்றுகளில தங்கட வாகனங்களுக்கு ஆரும் காத்தடிக்கப் போனால் "பம் வேலை செய்யாது. திருத்தோணும்" எண்டு செற்காரர் சொல்லுறதைப் பார்த்திருப்பியள். அண்டைக்குத் தான் அந்தப் 'பம்' பிழையாக்கும் எண்டிட்டு ஒரு கிழமை கழிச்சுப் போனாலும், அதே வசனத்தை ஒரு எழுத்துக்கூட மாறாமல் அப்பிடியே ஒப்புவிப்பினம். ஆனால் இப்பிடி கிழமைக்கணக்கில அந்தக் காத்தடிக்கிற பம்மை திருத்தாமல் வைச்சிருக்கிறதை ஆரும் பெற்றோலியம் கோப்பிரேசனுக்கு அறிவிச்சால், நட்டம் தங்களுக்குத்தான் எண்டது செற்காரருக்கு இன்னும் விளங்கேலைப் போல.

ஒரு பெற்றோல் 'செற்றைப்' போடுறதுக்கு அனுமதி குடுக்கிறதெண்டால், சில நிபந்தனையளுக்கு அவை கட்டுப்படோணும். அந்த செற்றுக்கு வாறவை தங்கட வாகனங்களுக்கு காத்தடிக்கிறதுக்கு 'பம்' பூட்டவேணும். காத்தடிக்கிற பம்தானே? அதையேன் நாங்கள் பூட்டோணும்? எண்டு முரண்டுபிடிச்சால் அவைக்கு செற் திறக்க அனுமதியே குடுக்காயினம். அந்தளவுக்கு ஒவ்வொரு செற்றுக்கும் உந்தக் காத்தடிக்கிற 'பம்' கட்டாயம். அதோட காத்தடிக்கிற பம்முக்காகவும், அதின்ர கரண்ட் செலவுக்காகவும் சேர்த்து ஒவ்வொரு வருசத்துக்கும் 13 ஆயிரம் ரூபா அப்பிடி பெற்றோலியம் கோப்பிறேசன் செற்காரருக்கு குடுப்பினம். அப்பிடி அவையிட்டக் கைநீட்டிக் காசும் வாங்கிப்போட்டு, இப்பிடி வருசக்கணக்கில காத்தடிக்கிற பம்மை செற்காரர் திருத்தாமல் வைச்சிருக்கிறது எவ்வளவு பிழை?

எல்லா இடமும் காத்தடிக்கிற கடையள் இருக்குமெண்டில்லை. அதோட இப்ப கடையளுக்குப் போய் வாகனங்களுக்குக் காத்தடிக்கிறதெண்டாலும் காசும் கூட. அதால ஆபத்து அந்தரத்துக்கு செற்றுகளில காத்தடிக்கலாம் எண்டு நம்பிப் போனால் அங்க "பம் வேலை செய்யாது" எண்டு அவையள் கையைவிரிச்சால் எப்பிடி இருக்கும்? செற்றில இருக்கிற பம் பழுதெண்டால் அதைப்பற்றி பெற்றோலியம் கோப்பிரேசனுக்கோ இல்லாட்டி அந்தப் பம்மை பூட்டின கொம்பனிக்கோ அறிவிச்சால் அவையள் ரண்டொரு நாளில வந்து திருத்திப்போட்டுப் போடுவினம். அதை எங்கட செற்காரர் கனபேர் செய்யிறேல. அப்பிடியே பழுதானபடியே பம்மை வருசக்கணக்கில வைச்சிருப்பினம். இப்பிடி அவையள் காத்தடிக்க முடியாத பழுதோட பம்மை கனகாலம் வைச்சிருந்தால் அதைப் பற்றி பொதுமக்கள் பெற்றோலியம் கோப்பிரேசனுக்கு முறைப்பாடு செய்தால் கதை கந்தலாயிடும். செற்காரருக்கு வருசா வருசம் குடுக்கிற 13 ஆயிரம் ரூபாவையும் குடுக்காமல் விடுறதோட, அந்த செற்றுக்கான பெர்மிசனையும் கொஞ்சநாளைக்கு நிப்பாட்டிவைக்க ஏலுமாம். இதெல்லாம் செற்காரருக்குத் தெரியுமோ தெரியேலை. இனியாவது உந்தப் பம்முகளைத் திருத்தி, அந்தரப்பட்டுவாற சனத்தின்ர வாகனங்களுக்குக் காத்தடிக்கிற வழியைப் பாருங்கோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்கினால் வெற்றிகிடைக்கும். தாய் வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். உறவினர்கள் வருகை சில சங்கடங்களை ஏற்படுத்தினாலும் பாதிப்பு இருக்காது.

**இடபம்:** புதிய முயற்சிகள் எதுவும் இன்றைக்கு வேண்டாம். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். காலையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். பிற்பகலுக்கு மேல் கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையக்கூடும். கணவன் மனைவிக்கிடையே சிறு கருத்துவேறுபாடு ஏற்பட்டாலும் உடனே சரியாகிவிடும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சி வெற்றிகர மாக முடியும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். பிற்பகலுக்கு மேல் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** இன்று புதிய முயற்சி எதிலும் ஈடுபட வேண்டாம். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக் கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உறவினர்களால் வீட்டில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**துலாம்:** இன்று பொறுமையுடன் செயல்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற சற்று அலைய வேண்டி இருக்கும்.

**விருச்சிகம்:** தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத் துணை உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** உற்சாகமான நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக் கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மற்றவர்கள் கோபத்தில் பேசினாலும், நீங்கள் பொறுமையுடன் இருக்கவேண்டியது அவசியம். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். அலுவலகத்தில் பணிகளில் கூடுதல் கவனம் தேவை.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். சிலருக்கு ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும்.

# பாலைதீவு அந்தோனியாருக்கு 19ஆம் திகதி கொடியேற்றம்

கிளிநொச்சி, மார்ச். 6

பூநகரிப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம், எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 22 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

அதனையொட்டி உள்ளூர் மற்றும் அயற் பிரதேச வர்த்தகர்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவது தொடர்பிலான முன்னாயத்தக் கலந்துரையாடல், பூநகரி பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கடந்தகாலங்களில் ஆலயத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த வர்த்தகர்களுக்கு இம்முறையும் அனுமதி வழங்கப்படவுள்ளது.

கலந்துரையாடலில் பங்குபற்றும் வர்த்தகர்களுக்கே ஆலய வளாகத்தில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான அனுமதி வழங்கப்படும்.

கலந்துரையாடலில் பங்கேற்று வியாபார நிலையங்களுக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு பூநகரிப் பிரதேசசபை கோரிக்கை விடுத்துள்ளது. (ச- 25, 125)

# மகளிர்தின நிகழ்வும் விற்பனைக் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், மார்ச். 6

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு, " அனைத்துப் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கும் உரிமை" எனும் தொனிப்பொருளில் சர்வதேச மகளிர்தின விழாவை சாவகச்சேரி நகர சபை பொன்விழா மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை நடத்தவுள்ளது.

நிகழ்வின் ஓர் அங்கமாக மகளிர் சேவை வழிகாட்டல் கூடங்களும் பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் நாளையும் நாளைமறுதினமும் காலை முதல் மாலை வரை நடைபெறவுள்ளன. (ச-25)

# வளவாளர்களிடம் விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 6

சைவபரிபாலன சபையினால் நடத்தப்படும் அறநெறி, பண்ணிசை, மிருதங்கம் ஆகியவற்றுக்கான கற்கைநெறிகள் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

மேற்குறித்த பாடநெறிகளைக் கற்பிக்க ஆர்வமுடைய வளவாளர்கள், ஆசிரியர்கள் தங்களது சுயவிவரங்களை 077 7895716 என்ற வாட்ஸ்அப் இலக்கத்துக்கு அனுப்பிவைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

# திருக்குறள் தேர்வும் வினாடிவினாவும்

யாழ்ப்பாணம், மார்ச். 6

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தவுள்ள திருவள்ளுவர் விழாவை முன்னிட்டு. யாழ். மாவட்டப் பாடசாலைகளில் உயர்தரத்தில் தமிழ்ப்பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கான திருக்குறள் தேர்வு மற்றும் வினாடிவினாப் போட்டி என்பவற்றை எதிர்வரும் 13 ஆம் திகதி வியா ழக்கிழமை நடத்தப்படவுள்ளன.

ஒரு பாடசாலை சார்ந்து ஐந்து பேர் கொண்ட ஓர் அணி பங்கேற்கலாம். ஆர்வமுள்ளோர் அதிபர் ஊடாகப் பொதுச் செயலாளர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், இல 28, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும், மேலதிக விவரங்களுக்குப் போட்டி இணைப்பாளரின் 0779900031 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ. 25,66)

# குருபூஜை விழா

யாழ்ப்பாணம், மார்ச்.6

சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிவஸ்ரீ. பால. திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவும், குருபூஜை விழாவும் தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திர மௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன.

சைவப்புலவர் செ.த.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்துகொள்ளவுள்ளார்.

குருபூஜையைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும், 'ஈழத்துச் சித்தர்களில் கனகரத்தினம் சுவாமிகள்' எனும் விடயப் பொருளில் பிரசங்கச்சுடர் இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசனின் சொற்பொழிவும் இடம்பெறும். குருபூஜையை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ச-41)

# மெய்வன்மைப்போட்டி

கொடிகாமம், மார்ச். 6

கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, அதிபர் ப. ஆனந்தராசா தலைமையில் பாடசாலை மைதானத்தில் இன்று வியாழக்கிழமை பி.ப.2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பூநகரிப் பிரதேச செயலர் த.அகிலன், சிறப்பு விருந்தினராகக் கிளிநொச்சி தெற்குக் கல்வி வலய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆசிரிய ஆலோசகர் க.குமரன், கௌரவ விருந்தினராக நெத்தலியாறு அ.த.க.பாடசாலையின் அதிபர் ப.துஸ்யந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25, 159)

# உதவிக் கொடுப்பனவு

சாவகச்சேரி, மார்ச் 6

தென்மராட்சிப் பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் மற்றும் நோய்க் கொடுப்பனவு போன்றவை நேற்று புதன்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்படுகின்றன. கொடுப்பனவை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

## நுனிப்புல் மேய்தல்!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடமிருந்து எந்தவொரு அழுத்தமும் இல்லாமல், பதற்றமும் இல்லாமல் மிக இலகுவாகத் தப்பித்திருக்கின்றது இலங்கை. 'இலங்கை அரசாங்கம் தனது உள்ளகப்பொறிமுறை நடவடிக்கையில், பாதிக்கப்பட்ட மக்களின் விருப்பங்களையும், அபிலாஷைகளையும் நிறைவேற்றும் வகையில் செயற்படவேண்டும்' என்ற 'அழுத்தத்துடன்' இலங்கை மீதான நடவடிக்கைகளை பிற்போட்டிருக்கின்றது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை.ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இதுவரையான அமர்வுகளிலேயே, தற்போது நடைபெற்றுவரும் 58 ஆவது அமர்வுதான் தமிழர்களைப் பொறுத்தவரை மிகவும் மோசமானது. ஏனெனில், பொறுப்புக்கூறல் தொடர்பான எந்தவொரு பொறிமுறையையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கொழும்பிடம் திணிக்கவில்லை .மாறாக ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு நற்சான்றுப் பத்திரத்தை வழங்குவதைத்தான் இணையனுசரணை நாடுகள் தங்களின் முழுநேரச் செயற்பாடாகக் கொண்டிருந்தன.

'இலங்கையில் அனைத்து மக்களினதும் பரந்துபட்ட ஆதரவைப் பெற்ற அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளமையை நாங்கள் அறிவோம்', 'அரசாங்கத்துக்குப் போதிய அவகாசம் இல்லை என்பதை நாங்கள் புரிந்துள்ளோம்', 'அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள நல்லிணக்கப் பொறிமுறையை வரவேற்கின்றோம்' இவ்வாறான வார்த்தைகளைத்தான் இணையனுசரணை நாடுகளிடம் இருந்து கேட்கமுடிந்ததே அன்றி, அதைத்தாண்டிய எந்தவொரு கனதியான வகிபங்கையும் பேரவை ஆற்றியதாயில்லை.

'பொறுப்புக்கூறல், மீண்டும் நிகழாமையை உறுதிப்படுத்தல் மற்றும் நல்லிணக்கம்' ஆகியவற்றை ஒரு பொதுப்பொறிமுறைக் கட்டமைப்பின் ஊடாக நிறைவேற்றவேண்டும் என்பதும், அதற்குக் காலஅவகாசம் தேவை என்பதும் ஏற்கக்கூடிய விடயங்கள்தான். ஆனால், சிறைக்குள் இருக்கும் அரசியற்கைதிகளின் விடுதலை தொடர்பிலும், காணி விடுவிப்புத் தொடர்பிலும், காணாமல் ஆக்கப்பட்டோரின் விவகாரத்திலும் அநுர அரசாங்கம் 'அப்பட்டமான பாராமுகத்துடன்தான்' செயற்பட்டுவருகின்றது. சொல்வது ஒன்றாகவும், செய்யவது ஒன்றாகவும்தான் தேசிய மக்கள் சக்தியின் காலங்கள் நகர்கின்றன. ஆனால், அதற்கெதிராக இணையனுசரணை நாடுகள் வாய்திறக்கவேயில்லை. இலங்கை அரசாங்கத்துக்குப் போதியளவு அவகாசங்கள் வழங்கப்பட்டாயிற்று. இனி, 'வேறு விதமாகப் பேசவேண்டும்'என்றுகூறிக்கொண்டிருந்த பிரிட்டன்கூட தமிழர்களுக்கு ஏமாற்றத்தையே மிச்சம் விட்டிருக்கின்றது.


போர்க்குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருப்பது இலங்கைமீதுதான். தேசிய மக்கள் சக்தி அரசு மீதோ அல்லது இதர கட்சிகளின் மீதோ அல்ல. ஆதலால், எந்தக் கட்சி ஆட்சியமைத்தாலும் 'தொடர்ச்சியான நடைமுறைகள்' பின்பற்றப்பட வேண்டுமே தவிர, புதிதாக ஒரு கட்சி ஆட்சி அமைக்கின்றது என்பதற்காக அவகாசங்களை வழங்குவது தகாது. இலங்கையில், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இதுவரை ஆட்சியில் இருக்காத இன்னொரு கட்சி ஆட்சியமைத்தால் அதைக் காரணமாகக் கூறி மீண்டும் அவகாசத்தை வழங்குவதா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் செயற்பாடாக இருக்கும்? உண்மையில், இலங்கையில் சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும், தேசிய மக்கள் சக்திக்கு எதிராக முன்வைக்கப்படும் அண்மைக்காலக் குற்றச்சாட்டுகளையும் மனித உரிமைகள் பேரவை ஆழமாகக் கவனிக்கவில்லை என்பதையே 58 ஆவது அமர்வு கட்டியம் செய்திருக்கின்றது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

உங்கள் கனவுகளை நினைவில் வைத்துக்கொண்டு அவற்றுக்காகப் போராடுங்கள்.

—பௌலோ கொய்லோ—




# 1,700/= உறுதி



## வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச்.6
சம்பள நிர்ணய சபையுடனான கடந்தகாலப் பேச்சுகளைப் போலன்றி தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பளத்தைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கையை எடுக்கும் என வர்த்தக, உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க சபையில் தெரிவித்துள்ளார்.

கடந்த முறையும் சம்பள நிர்ணய சபையே இந்தத் தீர்மானத்தை எடுத்தது. எனினும், அது நடைமுறைக்கு வரவில்லை. அத்துடன், தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் 1,700 ரூபாய் அடிப்படைச் சம்பளமாக உறுதிப்படுத்தப்படவேண்டும் என இராதாகிருஷ்ணன் எம்.பி. கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் வசந்த சமரசிங்க,

அது உண்மை. அப்போது அந்த சம்பள அதிகரிப்பு தொழிலாளர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதை நாம் அறிவோம். அதனால்தான் கடந்த செப்டம்பர் மாதம் இது தொடர்பாக பேச்சு நடத்தி இணக்கப்பாட்டையும் எட்டியுள்ளோம்.

அந்தவகையில், 1,350 ரூபா அடிப்படைச் சம்பளம், ஏனைய 350 ரூபா அவர்கள் எடுக்கும் கொழுந்துக் கிலோவை அளவிட்டு வழங்கப்படும். அதன்படி, அவர்களுக்கு 1,700 ரூபா சம்பளம் கிட்டும் - என்றார். (ச-இ)

## ரூபா ஏற்றம்

கொழும்பு, மார்ச்.6
அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்றுமுன்தினத்துடன் ஒப்பிடும்போது நேற்று மேலும் உயர்ந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ தகவல்களுக்கு அமைவாக, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் மற்றும் விற்பனைப் பெறுமதியானது நேற்று முறையே 290.99 ரூபாவாகவும், 299.59 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும், வளைகுடா நாணயங்களுக்கு எதிராகவும் ரூபாவின் பெறுமதி நேற்று உயர்ந்துள்ளது. (ச-இ)

## யோஷிதவின் பாட்டி கைதாகி பிணையில்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மகன் யோஷித ராஜபக்ச சம்பந்தப்பட்ட பணமோசடி விசாரணை தொடர்பாக யோஷிதவின் பாட்டியான டெய்சி பாரஸ்ட் விக்ரமசிங்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டார். அவரைநீதிமன்றில்முற்படுத்தியபோது பிணையில் விடுவிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-இ)

## ஜெரோமுக்கு பயணத்தடை நீக்கம்

கொழும்பு, மார்ச்.6
போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடை நீக்கப்பட்டுள்ளது.

இனங்களுக்கு இடையே மத வெறுப்பைத் தூண்டும் வகையில் பிரசங்கம் செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டிருந்த ஜெரோம் பெர்னாண்டோவுக்கு வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## சாவித்திரி முன்மாதிரி

கொழும்பு, மார்ச்.6
மகளிர் விவகார அமைச்சர் சாவித்திரி போல்ராஜ் ஐ.நா. அமர்வுகளில் கலந்துகொள்வதற்காக கடந்த மாதம் ஜெனீவா சென்றிருந்தார். அமைச்சரின் மேலதிக செலவுகளுக்கென வழங்கப்பட்ட 240 டொலர் பணத்தைச் செலவுசெய்யாமல் அரசாங்கத்திடம் திருப்பிக் கையளித்துள்ளார். அமைச்சர் அரசாங்கத்திடம் பணத்தைத் திருப்பிக் கையளித்தமைக்கான பற்றுச்சீட்டு ஊடகங்களில் பிரசுரமாகியுள்ளது. (ச-41-6)

நாளை
வெள்ளிக்கிழமை - மாசி - 23
07.03.2025
சுபநேரம் : 06.25 - 07.55
ராகுகாலம் : 10.55 - 12.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கலாநேத்ரா' விருதுக்கு விண்ணப்பம் கோரல்

வவுனியா,மார்ச்.6
வவுனியாப் பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து வழங்கும் 'கலாநேத்ரா 2025' விருதுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இம்முறை சிறுகதை, கவிதை, நாவல், கட்டுரை, நாடக எழுத்துரு, இசை, மரபுக்கலை, நாடக ஆற்றுகை, சிற்பம், ஓவியம், பரதம், வாத்திய இசை, குறும்படம், இயல்,அறிவிப்பு, மரபு இசை, ஊடகம் போன்ற துறைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் வவுனியாப் பிரதேச செயலகப் பிரிவினை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருப்பதுடன், 25 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருக்கவேண்டும்.


மற்றும் துறைசார்ந்த ஆவணப்பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு தேவை ஏற்படும் பட்சத்தில் விண்ணப்பதாரி நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவார். கடந்த காலங்களில் பிரதேச விருது பெற்ற கலைஞர்கள் மீளவும் விண்ணப்பிக்கமுடியாது, 40 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் மட்டுமே உள்வாங்கப்படுவர். விண்ணப்பங்களை எதிர்வரும்18ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-110)

# வடக்கில் ஆசிரியர் பற்றாக்குறை தீர்வு தராமல் அரசு பாராமுகம்

## ஆசிரியர் சங்கப் பொதுச்செயலர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், மார்ச் 6**
**வடக்கு மாகாணக் கல்வியில் முக்கியமான பிரச்சினையாக இருப்பது ஆசிரியர் பற்றாக்குறை. ஆயினும் அரசாங்கம் ஆசிரியர் பற்றாக்குறையைத்தீர்ப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
வரவு - செலவுத் திட்டத்துக்கமைய அரசாங்கம் 30 ஆயிரம் அரச ஊழியர்களை அடுத்த வருடம் இணைக்கவுள்ளது. அதற்காக 10 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே இதில் நாடளாவிய ரீதியிலுள்ள ஆசிரியப் பற்றாக்குறையை நிவர்த்திக்க வேண்டும். அதேவேளை வடக்கில் பின்தங்கிய பிரதேசத்தில் வேலை செய்யும் ஆசிரியர்கள் பதிலீடுகள் இல்லாத காரணத்தால் இடமாற்றம் கிடைக்காமல் உள்ளனர்.
இந்த இடமாற்றச் செயற்பாடு மிகவும் அவசியமானதாகும். அத்தோடு பின்தங்கிய பிரதேசத்தில் கல்விகற்கும் மாணவர்களது உரிமையையும் பாதுகாக்க வேண்டும் - என்றார். (ச-100)




## வெங்காயப்பூ விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 6
யாழ்.குடாநாட்டில் வெங்காயப்பூவின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
போதியளவு வெங்காயப்பூ அறுவடை செய்யப்பட்டு அதிகளவில் சந்தைக்கு எடுத்துவரப்படுகின்றது.
அவை விற்பனையின்றித் தேங்குவதால் அவற்றின் விலை வீழ்ச்சி கண்டுள்ளது. திருநெல்வேலி சந்தையில் ஒரு கிலோ வெங்காயப்பூ 50 ரூபாவாக விற்பனைசெய்யப்படுகின்றது. (ச-17)

# அரசாங்கம் ஒத்துழைத்தாலே படைமுகாமிலிருந்து நகர்வோம்

## கசூரினாக் கடற்படை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6
அரச திணைக்களங்கள் ஒத்துழைப்பு வழங்கினாலே காரைநகர் கசூரினாக் கடற்கரைப் பகுதியிலிருந்து அகன்று செல்வது குறித்து சிந்திக்கமுடியும் என்று இலங்கைக் கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
காரைநகர் கசூரினாக் கடற்படைமுகாம் தொடர்பில் உதயனில் வெளிவந்த செய்தி தொடர்பில் அவரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
நாம் தன்னிச்சையாக காரைநகர் கசூரினாக் கடற்கரை முகாமிலிருந்து வெளியேறமுடியாது. தேசிய ரீதியான சுற்றுலாத்தலங்களில் ஒன்றாக குறித்த கடற்கரை காணப்படுகின்றது. காரைநகர் கசூரினாக் கடற்படை முகாம் உயிர்களைப் பாதுகாக்கும் நோக்கிலேயே அமைக்கப்பட்டுள்ளது.
கடற்படையை அங்கிருந்து அகற்றுவதுடன் மாவட்ட காணி அலுவலகம், பிரதேச சபை, அரசாங்கம் எனப் பலதரப்பட்ட விடயங்கள் தொடர்புபடுகின்றன. ஆகவே தனித்து எம்மால் மட்டும் நடவடிக்கைகளை எடுக்கமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-125)



## நிறுவையில் மோசடி தராசுக்குச் சீல்

யாழ்ப்பாணம், மார்ச். 6
வலி. கிழக்கு நீர்வேலி வாழைக்குலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வாழைக்குலை நிறுத்தல் கருவி(தராசு), மாவட்ட நிறுத்தல் அளவைகள் கண்காணிப்பு அதிகாரிகளால் சீல் வைக்கப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,
மேற்படி கூட்டுறவுச் சங்கம் தொடர்பில் வருடந்தோறும் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வந்தன.
இந்நிலையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் இயங்கும் நிறுத்தல் அளவைகள் அதிகாரிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை குறித்த பகுதிக்கு விஜயம் செய்தனர். அங்கு வாழைக்குலைகள் நிறுப்பதற்கான கருவிகளைப் பரிசோதித்தனர். இதன்போது நிறுத்தல் கருவி பல வருடங்களாக முத்திரையிடப்படாமல் பயன்படுத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் கருவிக்குச் சீல் வைக்கப்பட்டது.
சம்பவம் தொடர்பில் பொறுப்பான மாவட்ட அதிகாரியைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, சங்கத்தின் மோசடி உறுதிப்படுத்தப்பட்டதுடன், தமது கொழும்புத் தலைமையகத்துடன் கலந்துரையாடி அவர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (25, 27)

# சட்டவிரோத மணல் அகழ்வு வல்லிபுரத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 6
வடமராட்சி, வல்லிபுரத்தில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் அத்துடன் இரு டிப்பர் வாகனங்கள் தப்பியோடியுள்ள நிலையில், ஹன்ரர் வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை நடந்துள்ளது. பருத்தித்துறைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து பொலிஸார் சோதனை நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.
வல்லிபுரம் ஆழ்வார் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள உண்டியல் சந்திக்கு அருகில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்தவர்கள் பொலிஸாரையும், விசேட அதிரடிப் படையினரையும் கண்டவுடன் தப்பியோடியுள்ளனர். தப்பியோடிய ஹன்ரர் வாகனம் ஒன்றின் சக்கரங்கள், விசேட அதிரடிப் படையினரின் இரும்பு ஆணிகள் பொருத்தப்பட்ட தடுப்பால் காற்றுப்போன நிலையில், அது கைப்பற்றப்பட்டதுடன், சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபரும், வாகனமும் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஏ-100)

## ஆக்கத்திறன் பொருள்கள் காட்சிப்படுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச். 6
வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் வேலணைப் பிரதேச செயலகம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், மகளிர் அபிவிருத்தி நிலையப் பயிலுநர்களின் ஆக்கத்திறன் பொருள்களின் காட்சிப்படுத்தல் வேலணைப் பிரதேச செயலக மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.
பிரதேச செயலர் க.சிவகரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் திருமதி கஜானி பார்த்தீபன் பங்கேற்கவுள்ளார். (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய உணவு, உள்நாட்டு உற்பத்தி பொருட்கள் சந்தையுடன் இசை விழா!

சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு, விழுது நிறுவனம் ஸ்கோப் திட்டத்துடன் இணைந்து நடாத்தும் சங்கமம் - வடகிழக்கின் பெண் உற்பத்தியாளர் விழா!






பெண் தொழில் முனைவோரின் சிறப்பு தயாரிப்புகள்

உள்ளூர் பலசரக்கு பொருட்கள் - தானியங்கள், மா வகைகள், தின்பண்டங்கள், ஆரோக்கியமான சிற்றுண்டிகள் மற்றும் பல.
கைவேலைப்பாடுகள், கைத்தறி ஆடைகள் மற்றும் துணிகள்
பாரம்பரிய உணவுப் பொருட்கள்,
சுகாதாரமான மற்றும் ஆரோக்கியமான சிற்றுண்டிகள்,
ஆடை & ஆபரணங்கள் - கை வேலைப்பாடுகள் மற்றும் அலங்கார பொருட்கள்

நேரடி இசை நிகழ்ச்சி



கொழும்பின் பிரபலமான இளைய நிலா இசைக்குழுவின் மெல்லிசை நிகழ்ச்சியை நேரடியாக கண்டு களியுங்கள்

மார்ச் 7, 2025
(வெள்ளிக்கிழமை)
பி.ப 2.00 - 6.30
சரஸ்வதி மண்டபம்
A1 ராமநாதன் வீதி (ராஜா கிறீம் ஹவுஸ்)



கலாசார நிகழ்ச்சிகள்

வடக்கு & கிழக்கின் பாரம்பரிய நடனம் பாடல்கள்,மற்றும் வண்ணமயமான கலை நிகழ்ச்சிகள், சிறார்களுக்கான புத்தாக்கமான விளையாட்டுக்கள்

உங்கள் மாலைப்பொழுதை குடும்பத்துடன் இனிமையாக செலவிட ஒரு அரிய வாய்ப்பு!
அனுமதி இலவசம் அனைவரும் வாரீர்!

SCOPE
Strengthening Social Cohesion and Peace in Sri Lanka
Co-funded by the European Union
german cooperation
Implemented by: giz

### யாழ்ப்பாண மாவட்டத்தில்

# ஏழு வீதிகளைச் சீரமைப்பதற்கு ஒருங்கிணைப்புக்குழு அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 6

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சீரமைக்கப்படவேண்டிய பிரதான வீதிகளைச் சீரமைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை கோரிய அனுமதியை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு வழங்கியுள்ளது. இந்த வீதிகளின் சீரமைப்புப் பணிகள் விரைவில் முன்னெடுக்கப்படும் என்று வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் ஜோய்ஸ் குறூஸ் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும், அமைச்சருமான இ.சந்திரசேகரன் தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர், ஜனாதிபதி யாழ்ப்பாண மாவட்டம் வந்தபோது சுட்டிக்காட்டப்பட்ட யாழ்ப்பாண பொன்னாலை பருத்தித்துறை வீதி, ஆவரங்கால் தொண்டைமானாறு வீதி, வழுக்கையாறு புங்குடுதீவு குறிகாட்டுவான் வீதி, தொண்டைமானாறு வல்லை துன்னாலை வீதி, சாவகச்சேரி, புலோலி வீதி, யாழ். கற்பகப் பிள்ளையார் வீதி, யாழ்ப்பாணம் மானிப்பாய் காரைநகர் வீதி உட்பட 7 வீதிகளைச் சீரமைப்பதற்கு எமது தலைமைச் செயலகம் தயாராக உள்ளது. அதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் அனுமதி தேவைப்படுகின்றது. மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அனுமதி வழங்கினால் அந்த வீதிகளைக் கிடைக்கும் நிதிமூலங்களின் மூலம் சீரமைக்கமுடியும் என்று தெரிவித்தார், அங்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், இந்த வீதிகள் சீரமைக்கப்படவேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா, யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து வீதிகள் தொடர்பில் எதிர்காலத்தில் காட்சிப்படுத்தல்களை மேற்கொண்டு அனுமதி கோருகின்றபோது, அவற்றின் முக்கியத்துவம் அறிந்து எம்மால் அனுமதி வழங்கமுடியும் என்று தெரிவித்தார். இந்த வீதிகளில் சில கிலோமீற்றர்களே இந்த ஆண்டில் சீரமைக்கப்படும். ஆயினும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி கிடைத்தால் தலைமைச் செயலகத்துடன் உரையாடி இயன்றளவு நிதியைப் பெற்றுச் சீரமைப்புப் பணிகளை முன்னெடுக்கமுடியும் என்று தெரிவித்தார். விடயங்களை ஆராய்ந்த மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு குறிப்பிட்டு, 7 வீதிகளையும் சீரமைப்பதற்கு அனுமதி வழங்கியது. (ஏ-125)



# பனை வெல்லம் உற்பத்தி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச்.6

பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்கள் பனைவெல்ல உற்பத்தியை ஆரம்பித்துள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை, கரவெட்டி, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, அச்சுவேலி ஆகிய 6 சங்கங்களும் இணைந்து சுமார் 25ஆயிரம் கிலோ பனை வெல்லத்தை உற்பத்தி செய்துள்ளன.

உற்பத்தி செய்யப்படும் பனை வெல்லம் உள்நாட்டவர்களால் மட்டுமன்றி வெளிநாட்டவர்களாலும் அதிகளவில் கொள்வனவு செய்யப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-17)

# திருவள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், மார்ச். 6

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில், திருவள்ளுவர் விழா நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பட்டிமண்டபம், போட்டிகள், பரிசளிப்பு என்பனவும் நடைபெறவுள்ளன. (அ. 25, 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் உற்பத்தியாளர் விழாவும் பாரம்பரியக் கலை விழாவும்

கொடிகாமம், மார்ச் 6

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, விழுது நிறுவனத்தின் ஏற்பாட்டில்,வடக்கின் பெண் உற்பத்தியாளர் விழாவும் கலை விழாவும் யாழ். ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில், நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியிலிருந்து 6.30 மணிவரை இடம்பெறவுள்ளன.

பெண் தொழில் முனைவோரின் சிறந்த உள்ளூர்த் தயாரிப்புக்களான தானியங்கள், மாவகைகள், தின்பண்டங்கள், ஆரோக்கியமான சிற்றுண்டிகள் மற்றும் ஆடை, ஆபரணங்கள், கைவேலைப்பாடுகள், அலங்காரப் பொருள்கள் என்பன காட்சிப்படுத்தப்படவுள்ளன. அத்தோடு இளையநிலா இசைக்குழுவின் மெல்லிசை நிகழ்ச்சியும், வடக்கு மற்றும் கிழக்கின் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளும், சிறார்களுக்கான புத்தாக்க விளையாட்டுகளும் இடம்பெறவுள்ளன. (ச-25, 159)

## கண்ணீர் அஞ்சலி



எமது தர்மகர்த்தா சபை உறுப்பினர் சிவலிங்கம் சுதாகரன் அவர்களின் அன்புத் தாயார்

**சிவலிங்கம் நாகேஸ்வரி**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோவில்**
**(பன்றிக்கோட்டுபிள்ளையார் கோவில்)**
**தர்மகர்த்தா சபையினர்.**

(cs.57670) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 04 . 1941



மறைவு 04 . 03 . 2025

**நடராசா சிவகுருநாதன் (சிவம்)**

சரவணை கிழக்கு, வேலணையை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்ட நடராசா சிவகுருநாதன் (சிவம்) அவர்கள் நேற்று முன்தினம் (04.03.2025) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இந்திராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு. நாகமுத்து நடராசா மற்றும் திருமதி பாக்கியலட்சுமி தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. முத்துக்குமார் திருநாவுக்கரசு மற்றும் திருமதி பூமணி தம்பதியின் அன்பு மருமகனும் திருமதி சிவநிதி, திரு.சிவகரன், திரு.கவிந்தன் மற்றும் காலஞ்சென்ற செல்வி சிவாஜினி (நிலமங்கை)ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிஷாந், குருஷாந், சகிஸ்னா, சஷ்மியா, கிஷானிகா, பிரித்திக், கனிஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற திரு. கந்தசாமி மற்றும் திருமதி தவமலர் (தவம்) திருமதி சொர்ணகாந்தி (தேவி), திரு.கேதாரநாதன் (சோதி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற திரு.அருமைநாயகம் மற்றும் திரு. தங்கவேல், திருமதி சறோயினி தேவி, திருமதி இந்திராணி, திருமதி ஏகநாயகி, திருமதி பாக்கியலட்சுமி, திருமதி ரதிதேவி, திருமதி திருவருட்செல்வி, காலஞ்சென்ற திரு.கிருஷ்ணகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் திரு.கிருபராசா, திருமதி தயாபரி, திருமதி அமிர்தவேணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.03.2025) வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் யாழ்ப்பாணம் 81/2 பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவில் (கொக்குவில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்) அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரவணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு :**
மகள் -00447546 821627 -சிவநிதி (லீலா)
மகன் - +94 76 709 7405 -சிவகரன் (கபிலன்)
மகன் -00447702240557 கவிந்தன் (ஐங்கரன்)
மருமகன் -+44 7711 275184 கிருபா

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 05 . 2013



மறைவு 03 . 03 . 2025

**செல்வன் நிகால்டான்சன் ஆர்த்திகன்**

(யா/ ஸ்கந்தவரோதய கல்லூரி - ஆண்டு 7 B மாணவன்)

கற்பக்குனை உடுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் நிகால்டான்சன் ஆர்த்திகன் கடந்த 03.03.2025 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நிகால்டான்சன் (கிளி) - தர்மினி (கோட்டக்கல்வி அலுவலகம் உடுவில் - அபிவிருத்தி உத்தியோகத்தர்) தம்பதியரின் அன்புப் புதல்வனும், அர்ச்சனாவின் (உடுவில் மகளிர் கல்லூரி - மாணவி) அன்புச் சகோதரனும், துரைரத்தினம் - மேரி வனிதா மலர், காலஞ்சென்றவர்களான மகேந்திரன் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்புப் பேரனும், நிகால்றெக்சன் (சந்திரன்), தீபா (ஜேர்மன்), நிகால் ஜோன்சன் (குயின்), றஜனி (பிரான்ஸ்), மோகன்ராஜ் - தர்சியா (பிரான்ஸ்), பிறேமதாசன் - தயாளினி ஆகியோரின் பெறாமகனும், பிரதீபன் (வலி வடக்கு பிரதேசசபை), பிரபாகினி ஆகியோரின் அன்பு மருமகனும், அட்சயன், அதுசன் (ஜேர்மன்), ஆகவி, அகானா (பிரான்ஸ்), சஜினா, கிருத்திகா, பவித்திரன் (பிரான்ஸ்), யர்சனன், லினுஜன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், கபினயாவின் மச்சானும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.03.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு 11.00 மணியளவில் மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு 12.00 மணியளவில் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல்: குடும்பத்தினர்**
077 182 7825
077 494 0536

**கற்பக்குனை,**
**உடுவில், சுன்னாகம்.**

(CS 57664) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 02 . 1950



மறைவு 04 . 03 . 2025

**அம்பிகைபாகு சண்முகராசா**

கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும், நுணாவில் சந்தி, வீரக்கொடியர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பிகைபாகு சண்முகராசா நேற்றுமுன்தினம் (04.03.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பிகைபாகு மற்றும் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தர்மேஸ்வரி (திலகம்) அவர்களின் அன்புக் கணவரும், சிவஞானம் (கனடா), புஸ்பராசா (லண்டன்), சிவசண்முகராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜெசிதா (சுவிற்சர்லாந்து), சுகிர்தா (கனடா), பிரதீபன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயானந்தன், குணராசா, சாளினி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆஷா, மகிஷா, ரனிஷ்கா, ரஷ்வின், சஜிதன், திவ்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றியவிபரம் பின்னர் அறிவிக்கப்படும்.



இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல் : குடும்பத்தினர்**
077 820 2443
தீபன் - 074 352 6730

வீரக்கொடியார் வீதி,
நுணாவில் சந்தி.

(CR/44492) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# யாழ்.பல்கலைக்கழகத்தில் ஓவியக்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 6
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகநுண்கலைத்துறையின் மாணவர் அமைப்பாகிய கலை வட்டத்தின் ஏற்பாட்டில் 'வேர்களும் தடங்களும்: புலப்பெயர்வூடும் ஞாபகத்தினூடும் ஓர் பயணம்' எனும் ஓவியக் கண்காட்சி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைக் கலைக்கூடத்தில் ஆரம்பமானது.
யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்து தென் அயர்லாந்தில் வாழ்ந்துவரும் காண்பியக் கலைஞரான அனுசியா சுந்தரலிங்கத்தின் புலப்பெயர்வு அனுபவம் மற்றும் ஞாபகங்களை வெளிப்படுத்தும் படைப்புகள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ச-66)

# மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும்

## பைசர் முஸ்தபா கோரிக்கை



**கொழும்பு, மார்ச் 6**
**7 ஆண்டுகளாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் மாகாண சபைத் தேர்தலையும் விரைவாக நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புதிய ஜனநாயக முன்னணியின் உறுப்பினர் பைசர் முஸ்தபா கோரியுள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் தொழில் அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
மாகாணசபைகளின் நடவடிக்கைகளை கடந்த 7 வருடங்களாக அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் ஆளுநர்களும் அதிகாரிகளுமே மேற்கொண்டுவருகின்றனர். ஆளுநர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றவர்கள். ஆளுநர்களாக நியமிக்கப்படுவது பெரும்பாலும் தோல்வியடைந்த அரசியல்வாதிகளே.
இந்தநிலைமையால் பொதுமக்களே பாதிக்கப்படுகின்றனர். மாகாணசபைத் தேர்தலையும் விரைவாக நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (எ-இ)

# சுற்றுலாவிகளை ஈர்க்க வர்த்தக நிலையங்களை வடமராட்சியில் மேம்படுத்துக


யாழ்ப்பாணம், மார்ச் 6
வடமராட்சி கிழக்கு வர்த்தக நிலையங்களை நவீனமயமாக்கி சுற்றுலாவாசிகளை கவரக்கூடிய வகையில் மாற்றியமைக்க வேண்டும் என்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி தெரிவித்துள்ளார்.
வடமராட்சி கிழக்கு வர்த்தகர் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
எமது பிரதேசத்துக்கு அதிகளவான சுற்றுலாப்பயணிகள் வருகைதருகிறார்கள். ஆனால் கடற்கரையை மட்டுமே பார்த்துவிட்டுச் செல்கிறார்கள்.
அவர்கள் தங்கிநின்று அனைத்து வகையான உணவுகளையும் விரும்பி உண்ணுவதற்கான வர்த்தக நிலையங்கள் இங்கு இல்லை. எனவே எமது பிரதேச வர்த்தக நிலையங்களை நவீனமயமாக்குவதன் மூலம் அதிகளவான சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து எமது பிரதேச வர்த்தக நிலையங்களை மேம்படுத்தமுடியும்- என்றார். (ச-27)

# தேர்தல் முன்னாயத்தம்; கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 6
பவ்ரல் அமைப்பின் ஏற்பாட்டில், தேர்தல் தொடர்பான கலந்துரையாடல், சேர் பொன் இராமநாதன் வீதி, யாழ். ராஜா கிறீம் ஹவுஸ் மேற் தளத்திலுள்ள அறையொன்றில் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நடைபெறவுள்ளது.
கலந்துரையாடலில் பங்கேற்குமாறு, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், கல்வியியலாளர்கள், மார்ச்12 இயக்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் பவ்ரல் அமைப்பின் செயற்பாட்டாளர்கள் என மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையானோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது
(ச-25, 66)

# மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 04 . 1948



மறைவு
05 . 03 . 2025

**சதாசிவம் தவானந்தராஜா**

1ம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் இல.24 சபாபதி லேன், தலையாளி கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் தவானந்தராஜா (தறுமு) நேற்று (05.03.2025) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-தெய்வானைப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை-கனகம்மா தம்பதியின் பாசமிகு மருமகனும் இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் வத்சலா (ஆசிரியை-தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி), கௌரிகரன் (லண்டன்), ஸ்ரீவித்தியா, தர்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிதாகரன் (தினக்குரல்), சுரேசினி (லண்டன்), திருச்செல்வம் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிவேதன், நிதிலன், லுஜித், வினுசன், சுஜீவன், சுஜீதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் தில்லைநாயகி (ஜேர்மன்), காலஞ்சென்றவர்களான தவபலநாதன், சற்குணசிங்கம் மற்றும் பரமேஸ்வரி (ராசாத்தி-கனடா), காலஞ்சென்றவர்களான ஸ்ரீஸ்கந்தராஜா, வசந்தகுமாரி, செந்தில்மணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சச்சிதானந்தம் மற்றும் சுந்தரமூர்த்தி (ஜேர்மனி), சரவணபவன், நாகேஸ்வரி (ஜேர்மன்), செல்வராஜா (சுவிஸ்), மகேஸ்வரி (லண்டன்) புவனேஸ்வரி (ஜேர்மன்), சாருகாசினி (சுவிஸ்) காலஞ்சென்ற தருமரத்தினம் மற்றும் யோகவதி, விஜியலட்சுமி, வைரவநாதன், புனிதவதி மற்றும் காந்தரூபி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.03.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 01.00 மணியளவில் மண்டைதீவு தலைக்கிரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.24 சபாபதி லேன்,**
**தலையாளி,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## 'கட்' வெட்டு

தோற்றவுள்ள மாணவர்கள், அண்மைக்காலமாகக் கல்வி விடுமுறையில் நின்றுவிட்டு பரீட்சை அனுமதி அட்டைகளைப் பெறுவதற்காக நேற்றுப் பாடசாலைக்குச் சென்றுள்ளனர்.
இதன்போதே, பாடசாலையின் ஒழுக்கத்துக்கு ஒவ்வாத முறையில், சிகை அலங்காரம் செய்துவிட்டுச் சென்ற சில மாணவர்கள் அதிபரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். தமது சிகை அலங்கரிப்பை அந்த மாணவர்கள் சீர்செய்த பின்னரேயே அவர்களுக்குப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.
மாணவ ஒழுக்கத்துக்கு முரணான வகையில் சிகை அலங்காரம் செய்வதைத் தடைசெய்யும் வகையில், வடமாகாண ஆளுநரின் தலைமையில் சிகை அலங்கார நிலையங்களின் உரிமையாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் உடன்பாடுகள் எட்டப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.
(அ-ம-20-26)

## யாழ். - திருச்சி...

ளது. இந்த விமானப் பயணத்தின் அட்டவணைப்படி, மதியம் 13.25 மணிக்கு திருச்சி விமான நிலையத்தில் இருந்து புறப்படும் விமானம் 14.25 மணிக்கு யாழ்ப்பாணம் விமான நிலையத்தை வந்தடையும். மீண்டும் மாலை 15.10 மணிக்கு யாழ்ப்பாணம் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு மாலை 16.05 மணிக்கு திருச்சி விமான நிலையத்தைச் சென்றடையும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ம-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாகம் தெரிவு

யாழ்., மார்ச் 6 சுன்னாகம் தாளையடி பூரணை புஷ்கலை சமேத ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் ஆலயத் தொண்டர் சபையின் நிர்வாகப் பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன்போது தொண்டர் சபையின் புதிய தலைவராக பா.விமலகுமார், உபதலைவராக சி.பாபுதாஸ், செயலாளராக ர.காமராஜ், உபசெயலாளராக க.நிசானுயன், பொருளாளராக ம.கீர்த்தனன், ஆலோசகராகப் பா.பாலபத்மன், இணைப்பாளராக ர.யுகராஜ் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டதுடன் 11 பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-66)

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 06 . 1952



மறைவு 04 . 03 . 2025

### கலைஞர் லயன்ஸ் நீக்லஸ் மரியதாஸ் பாலச்சந்திரன்

(முன்னாள் மாநகர சபை உறுப்பினர், முன்னாள் ஜெயா கிறீம் ஹவுஸ், ஜெயா சவுண்ட், சமாதான நீதவான், கலாபூஷணம், யாழ்இரத்தினா, கலைஞான பூரணர், உலகத் தமிழ் மாமணி)

நாவாந்துறை யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கலைஞர் திரு. நீக்லஸ் மரியதாஸ் பாலச்சந்திரன் (முன்னாள் மாநகர சபை உறுப்பினர், சமாதான நீதவான்) அவர்கள் நேற்று முன்தினம் (04.03.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நீக்கிலஸ்-கத்தரீனா தம்பதியின் பாசமிகு மகனும் தியோ பத்திநாதர்-திரேசம்மா (பவுணம்மா) தம்பதியின் அன்பு மருமகனும் சகாயமலர் (ஜெயவதி) அவர்களின் ஆருயிர்க் கணவரும் திரு. றொனி ஜெயச்சந்திரன், திருமதி மேரி ஆன் திரேசா, திரு. மைக்கல் ஜொனி, திரு. நீக்லஸ் ஜோய், திரு. றொனி தொம்சன் அவர்களின் அன்புத் தந்தையும் இலியானா, இனியன், மரிய யுவிக்கா அவர்களின் அன்பு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வு நாளை (07.03.2025) வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் நாவாந்துறை சென்மேரிஸ் சனசமூக நிலைய மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தொடர்ந்து நாவாந்துறை பரலோக அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டு இறுதியில் நாவாந்துறை சேமக்காலையில் கலைஞரின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

இல-420,
காரைநகர் வீதி,
கடற்கரை வீதி,
நாவாந்துறை வடக்கு.
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு :
0774126853 (இலங்கை) -மகள்
00447424553804 (லண்டன்) -மகன்
004746811639 (நோர்வே) -மகன்
0033666963680 (பிரான்ஸ்) -மகன்

தகவல்: குடும்பத்தினர்

## வேலைக்கு ஆள் தேவை

கிளிநொச்சி திருநகர் பகுதியில் விவசாயக் காணிக்குள் குரங்குகள் வராமல் காவல் வேலை பார்ப்பதற்கு ஒருவர் தேவை.

தொடர்பு: 076 676 3012

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 02 . 1945



மறைவு 05 . 03 . 2025

### வேலுப்பிள்ளை விவேகானந்தன்

(பிரபல வர்த்தகர், நிஷா பாதணி விநியோகஸ்தர்)

வதிரி திருவெண்பாதியை பிறப்பிடமாகவும் ராணி மஹாலை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் வேலுப்பிள்ளை விவேகானந்தன் அவர்கள் நேற்று (05.03.2025) புதன்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை அம்மாப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை கதிராசி தம்பதிகளின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், அமரர் வே.கிருஸ்ணானந்தன், அமரர் வே.சதானந்தன், திருமதி.இ.இந்திராணி, வே.கிருபானந்தன், அமரர் வே.ரூபானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் திருமதி சாருமதி மோகனராங்கன் (பிரான்ஸ்), திரு.வி.சாரங்கன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் - உடற்கல்வி, வலயக்கல்வி பணிமனை, யாழ்ப்பாணம்), திருமதி. கௌசிகா விஜேந்திரன் (ஆசிரியை - யா/வட இந்து மகளிர் கல்லூரி), திருமதி. நிஷாந்தி நரேந்திரன் (சுவிஸ்), திருமதி. மயூரி சுமன் (ஆசிரியை - யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரு.பா.மோகனராங்கன் (பிரான்ஸ்), திருமதி.சா.துஷாந்தினி, திரு.லோ.விஜேந்திரன் (கனடா), திரு.நா.நரேந்திரன் (சுவிஸ்), திரு.சு.சுமன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மோ.சித்தார்த், மோ.சாருக்ஷன், மோ. சாருதி, சா.தன்ஷிகா, சா.ஜருக்ஷிகா, வி.கௌஷீரா அஞ்சலி, ந.ஜஸ்வந்த், ந.லக்கீராஞ்சலி, ந.அபிஸ்வா ஆகியோரின் பாசமிகு பேரனும் அமரர் திருமதி.கி.விஜேயரத்தினம், அமரர் சி.க.இராஜேந்திரன் (கிளாக்கர் ஐயா), திருமதி.கி.புஸ்பராணி ஓய்வுநிலை ஆசிரியை), திருமதி.ரூ.ராகினி, அமரர்களான த.இரத்தினசிங்கம் (ஆசிரியர்), த.துரைராஜசிங்கம், த.இராஜசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.03.2025) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை ஆழ்ந்த துயரத்துடன்அறியத்தருகின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சண்முகலிங்கம் அன்னலட்சுமி



அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் அம்பனை தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் அன்னலட்சுமி நேற்றுமுன்தினம் (04.03.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பொன்னம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வைத்தி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைத்தி சண்முகலிங்கத்தின் (உரிமையாளர்- Elephant Metal) அன்பு மனைவியும், அபிராமி (கனடா), தயாபரி (ஆசிரியர் - யா/ மகாஜனக் கல்லூரி), தேவகி (சட்டத்தரணி), கலையரசி, காலஞ்சென்ற திருக்குமரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரமணன் (கனடா), சுதாகரன் (நியூசிலாந்து), பார்த்திபன் (சட்டத்தரணி), திபாகரன் (கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியும், சிரீஷான், கார்த்திக் (கனடா), கெனீஷா, கிருத்திகா, ஜஸ்வந் ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் செல்வரட்ணம், சிவகுரு, சதாசிவம், ராஜேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 25.07.1957 மறைவு 04.03.2025

தொடர்பு:
077 339 4801
077 348 3557

தகவல்: குடும்பத்தினர்.

(cs:54888)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வடமாகாண...

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் கடற்றொழில், நீரியல்வள மற்றும் கடல்வளங்கள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடற்றொழிலைக் கட்டியெழுப்புவதற்குரிய புதிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. இலங்கையைச் சூழ கடல் இருந்தும், இந்தத் தொழிற்றுறையை முன்னேற்றுவதற்குக் கடந்த காலங்களில் காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கடன்பொறிக்குள் சிக்கிய நிலையே காணப்பட்டது. எனவே, இந்நிலையிலிருந்து எமது அமைச்சை கட்டியெழுப்புவதற்குரிய தேவைப்பாடு எமக்கு உள்ளது. அதனைச் செய்வோம்.

வடக்கிலுள்ள கடற்றொழிலாளர்கள் எமக்கு பெருவாரியான ஆதரவை வழங்கினர். அந்த மீனவ மக்கள் எம்மீது வைத்த நம்பிக்கைக்கு கடுகளவேனும் தீங்கு விளைவிக்கமாட்டோம் என்ற உறுதிமொழியை நாடாளுமன்றத்தில் இருந்து வழங்குகின்றேன்.

மீனவர்களின் வாழ்க்கையுடன் ஏனையவர்கள்போல் விளையாடும் விளையாட்டு பிள்ளைகள் நாம் அல்லர். நாம் மீனவர்களுடன் வாழ்பவர்கள். அவர்களின் வலி, வேதனை எமக்குப் புரியும். வடக்கில் மீன்பிடித்தொழிலை கட்டியெழுப்புவதற்குரிய வேலைத்திட்டங்கள் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றன - என்றார். (அ-ம-44)

## மாத்திரைகளை...

உட்கொண்ட ஒன்றரை வயதுடைய ஆண் குழந்தையொன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது. அன்டனி சஞ்ஜித் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தைக்கு நேற்றுமுன்தினம் இரவு திடீரெனசுகவீனம் ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து மாங்குளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அந்தக் குழந்தை, மேலதிக சிகிச்சைக்காக மல்லாகம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. எனினும், சிகிச்சையின்போது அந்தக் குழந்தை உயிரிழந்துள்ளது. மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-19-28)

## போதை...

வடக்கில் இன்று அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனைக்கும், போதைக் கடத்தல்களுக்கும் பின்புலம் இராணுவமே. கிறிஸ் பூதம் மற்றும் ஆவா உள்ளிட்ட ஆயுதக் குழுக்களின் பின்புலம் எவ்வாறு இராணுவமாக இருந்ததோ அவ்வாறுதான் இன்று போதைப்பொருளின் பின்புலத்திலும் இராணுவமே உள்ளது என்பதுதான் மறுக்க முடியாத உண்மை என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் இருந்து போதைப்பொருள்கள் ஒழிக்கப்பட வேண்டுமானால், பிரச்சினைக்குரிய காரணத்தைச் சரியாக இனங்கண்டு அதைக் களையவேண்டும். பிரச்சினையின் பின்புலமே இராணுவத்தினரும், கடற்படையுமாக இருக்கின்றபோது, அதே கடற்படையையும் அதே இராணுவத்தையும் வைத்துக்கொண்டு இந்தப் பிரச்சினையைச் சரி செய்துவிடலாம் என்று நீங்கள் கனவு காணாதீர்கள். அறைக்குள் இருக்கும் யானையை எதற்குத் தேடிக்கொண்டிருக்கின்றீர்கள்?

தமிழர்கள் இன்று இராணுவத்தையும், கடற்படையையும் தமது எதிரிகளாகப் பார்க்கின்றனர் என்பதுதான் உண்மை. அவர்களின் மனோநிலையை மாற்றாமல், அதற்குரிய திட்டங்களை ஆத்மார்த்தமாக முன்னெடுக்காமல் ஒருநாளும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. இந்த விடயத்தை நாங்கள் கோபத்திலேயோ, இனவாதத்திலையோ, வெறுப்பிலையோ சொல்லவில்லை. இதுவே உண்மை. எனவே, தற்போதைய அரசாங்கம் உண்மையில் ஒரு முறைமை மாற்றத்துக்குள் செல்கின்றது என்றால், இந்த அடிப்படையைச் சீரமைக்கவேண்டும் - என்றார். (அ-ம-இ-26-66)

## பொலிஸ்...

தன்னைப் பொலிஸ் என்று அடையாளப்படுத்தி, வழக்கொன்றில் இருந்து விடுவிப்பதற்கு உதவுவதாகக்கூறி பெருந்தொகையை லஞ்சமாகப் பெற்றுள்ளார். எனினும், அந்த நபர் கூறியதைப் போன்று நீதிமன்ற நடைமுறைகளோ அல்லது வழக்கின் நகர்வுகளோ அமையவில்லை. அத்துடன், சந்தேநபருக்கு நீதிமன்றம் தண்டப்பணத்தையும் விதித்துள்ளது.

இதையடுத்தே, தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அந்த நபர் உரிய ஆதாரங்களுடன் விடயத்தை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளார். இதைத் தொடர்ந்தே, யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (அ-ம-26-125)

## பிற்போடப்பட்டி...

கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான பொன் அணிகளின் போர் துடுப்பாட்டப் போட்டியும் பெப்ரவரி மாதம் 27ஆம் திகதிமுதல் நடைபெறவிருந்தது. எனினும் காலநிலை மாற்றங்கள் காரணமாக, அந்த ஆட்டங்கள் பிற்போடப்பட்டன. இவ்வாறு பிற்போடப்பட்ட ஆட்டங்களே, இன்று, நாளை, நாளைமறுதினம் ஆகிய மூன்று தினங்களில் நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம20-66-125)

## பெண்...

இரண்டு மணிநேரத்துக்குள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் நிதி நிறுவனத்தில் பணிபுரியும் பெண் ஊழியரிடம் வல்லைவெளியில் வைத்து தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்டது. இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்ட நிலையில், காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

பொலிஸார் வெறும் இரண்டு மணிநேரத்துக்குள் சந்தேகநபரைக் கைதுசெய்தனர். கொள்ளைக்குப் பயன்படுத்திய மோட்டார்சைக்கிள், அறுக்கப்பட்ட தங்கச் சங்கிலி என்பன சந்தேகநபர்களிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

கொள்ளையிடப்பட்ட தங்கச் சங்கிலி நகைக்கடையொன்றில் விற்பனை செய்யப்பட்ட நிலையில், இது தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன், இன்னொரு சந்தேகநபர் தலைமறைவாகியுள்ள நிலையில், அவரைக் கைதுசெய்யவும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. (அ-ம-26-100-20-27)

## பயங்கரவாதத்...

தொடர் தற்போது நடைபெற்றுவருகின்றது. இந்தக் கூட்டத் தொடரில் வைத்தே, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறையிடப்பட்டுள்ளவர்களை விடுவிக்குமாறு இணையனுசரணை நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

கனடா, பிரிட்டன், மாலாவி, மொண்டிநீக்ரோ, வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகள் இலங்கை தொடர்பான தீர்மானங்களுக்கு இணையனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-6)

## யாழ்...

முதல் எதிர்வரும் மூன்று வருடங்களுக்குச் செயற்படக்கூடிய வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் ஏ.எஸ்.சந்திரபோஸ் (ஓய்வுபெற்ற சமூகவியல் பேராசிரியர்), இ.பத்மநாதன் (முன்னாள் பிரதம செயலாளர் நிதி), ஏந்திரி திருமதி எஸ்.வினோதினி (பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம்), ஏந்திரி ஏ.சுபாகரன் (திட்டப்பணிப்பாளர், ஏசியா பவுண்டேசன்), மருத்துவ நிபுணர் என்.சரவணபவ (மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் நிபுணர்), ஷெரீன் அப்துல் சரூர் (எழுத்தாளரும், பெண் உரிமைச் செயற்பாட்டாளரும்), கலாநிதி எம்.அல்பிரட் (முன்னாள் பீடாதிபதி, பேராதனைப் பல்கலைக்கழகம்), ஏந்திரி அ.குணாளதாஸ் (பட்டயப் பொறியியலாளர்), என்.செல்வகுமாரன் (முன்னாள் சட்டப் பீடாதிபதி, கொழும்பு), திருமதி வனஜா செல்வரட்ணம் (பணிப்பாளர், வடமாகாண தொழிற்றுறைத் திணைக்களம்), டி.கே.பி.யூ. குணதிலக (முன்னாள் பிரதிப் பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை), எம்.ஜே.ஆர்.புவிராஜ் (முன்னாள் பணிப்பாளர், திறைசேரி), பேராசிரியர் சி.சிவயோகநாதன் (வாழ்நாள் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம்), பி.ஏ.சரத்சந்திர (வவுனியா மாவட்ட முன்னாள் மாவட்டச் செயலர்) க.பிரபாகரன் (சட்டத்தரணி), ஏ.எம்.பி.என்.அபேசிங்க (மாகாணப் பணிப்பாளர், விவசாயத் திணைக்களம், வடமத்திய மாகாணம்) ஆகியோரே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பேரவையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் உள்வாரிப் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட ஒரு உறுப்பினர் அதிகமான எண்ணிக்கைக்கு வெளிவாரி உறுப்பினர்கள் பேரவைக்கு நியமிக்கப்படுவது வழமையாகும். பல்கலைக்கழகப் பேரவை ஒன்றின் வெளிவாரி உறுப்பினராகத் தெரிவு செய்யப்படும் ஒருவர் ஒரு பட்டதாரியாக இருத்தல் வேண்டும் அல்லது முகாமைத்துவத்தில் மீயுயர் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

எனினும், ஆட்சியதிகாரத்திலுள்ள கட்சிகளின் சிபாரிசின் அடிப்படையிலேயே இதுவரை காலமும் பேரவைக்கான வெளிவாரி உறுப்பினர்கள் நியமனம் இடம்பெற்றுவந்திருந்தது. இதன்படி, யாழ்ப்பாணத்தில் மிக நீண்டகாலமாக அமைச்சராக இருந்த ஒருவரின் செல்வாக்கில் நியமனங்கள் வழங்கப்பட்டதால் அந்த நியமனங்கள் குறித்த அதிருப்தி பல்கலை வட்டாரங்களில் நிலவி வந்தது.

இந்தநிலையில் இந்தமுறையும் தமிழ் அமைச்சர் ஒருவரின் சிபாரிசிலேயே, நியமனங்கள் இடம்பெற்றுள்ளதாக ஒரு சாரார் குற்றஞ்சாட்டியுள்ளனர். (அ-ம-26-125)

## முல்லைத்தீவு...

டுள்ளது. இது தொடர்பில், பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் ஏ.எச்.எம். எச். அபேரத்ன நாடாளுமன்றத்தில் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று நாட்டின் பல பகுதிகளிலும் தீயணைப்புத் துறை இல்லை. அந்தக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். முதற்கட்டமாக முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் தீயணைப்பு பிரிவை அமைப்பதற்காக உலக வங்கியின் உதவியுடன் 60.5 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வடக்கு மாகாண செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. விரைவில் அந்தப் பணிகள் நிறைவுசெய்யப்படும் - என்றார். (அ-ம-இ)

## அத்துமீறுதலைத்...

தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில் மக்கள் ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாகச் செல்ல முற்பட்டபோது அதனைத் தடுப்பதற்குப் பெரும் பிரசாரங்களை ஆஸ்திரேலியா மேற்கொண்டது. சட்டமாக இருக்கட்டும், பிரச்சாரமாக இருக்கட்டும் உரிய தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன.

போர்க்காலத்தில் வடக்கு மக்கள் இந்தியாவுக்கும் சென்றார்கள். இந்தியா அவர்களைப்பாதுகாத்தது. இதனை மதிக்கின்றோம். வடக்கில் தற்போது கடற்றொழில்தான் பிரதானமாக உள்ளது. எனவே, அதனை இல்லாதொழிப்பதற்கு இடமளிக்காமல் இருப்பதே வடக்கு மக்களுக்கு ஆற்றும் பெரும் சேவையென்பதை இந்திய அரசு மற்றும் தமிழக அரசிடம் கூறிக்கொள்கின்றேன்.

இந்தியாவில் உள்ள சட்டங்களை கடுமையாக அமுல்படுத்தலாம். இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைவதைத் தடுத்து, வடக்கு மீனவர்களின் கடற்றொழிலைப் பாதுகாப்பதற்கு இந்தியா நடவடிக்கை எடுத்தால் அதுவே வடக்கு மக்களுக்கான பெரும் உதவியாக அமையும். இந்தியாவால் இதனைச் செய்யமுடியும். இலங்கைக்கு இந்தியா உதவிகளை வழங்கினாலும் வடக்கு மக்களுக்காக இதனைச் செய்ய வேண்டும். அப்போதே அந்த உதவிகளில் உண்மைத்தன்மை இருக்கும் - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வுபெற்ற நீதிபதிகளுக்கு பதவிகள் வழங்குவது முரண்

## சட்டத்தரணிகள் கூட்டிணைவு சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 6

ஓய்வுபெற்ற நீதிபதிகள் அரச மற்றும் தனியார் துறைகளில் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவது அவர்கள் பதவியிலிருந்த காலப் பகுதியில் வழங்கிய தீர்ப்புக்களின் நேர்மைத்தன்மையை சந்தேகத்துக்கு உட்படுத்தும். நீதித்துறையின் சுயாதீனத்தன்மை மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையில் சரிவை ஏற்படுத்தும் என சட்டத்தரணிகள் கூட்டிணைவு தெரிவித்துள்ளது.

சட்டத்தரணிகள் கூட்டிணைவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஓய்வுபெற்ற நீதிபதிகளை, அதிலும் உயர்நீதிமன்ற நீதியரசராகப் பதவி வகித்து ஓய்வுபெற்றவர்களை தற்போது அரச மற்றும் தனியார் துறைகளில் உயர் பதவிகளுக்கு நியமிப்பதானது சட்டத்துறை சார்ந்தோர் உள்ளடங்கலாக நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் மத்தியிலும் தீவிர கரிசனையைத் தோற்றுவித்துள்ளது.

ஓய்வுபெற்ற நீதிபதிகள் அரசியலமைப்புப் பேரவையின் ஊடாக, உரிய செயன்முறையைப் பின்பற்றிச் சட்ட ஆணைக்குழு உள்ளிட்ட கட்டமைப்புக்களின் தவிசாளர்களாகவோ, விசாரணை ஆணைக்குழுக்களின் தலைவர்களாகவோ நியமிக்கப்படுவதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை. அதுமாத்திரமன்றி சட்டக் கல்வி மற்றும் நீதிபதிகள், சட்டத்தரணிகளுக்கான பயிற்சி வழங்கல் என்பவற்றுக்கு ஓய்வுபெற்ற நீதிபதிகளின் அறிவு மற்றும் அனுபவத்தைப் பயன்படுத்தமுடியும்.

ஓய்வுபெற்ற நீதிபதிகளுக்கான ஓய்வூதியம் உள்ளிட்ட நன்மைகள், சேவைக்காலத்தில் அவர்கள் பெற்ற நன்மைகளுக்கு சமனானதாக அமையவேண்டும் என வலியுறுத்துகின்றோம். அவர்கள் ஓய்வுபெற்றதன் பின்னர் அரசியலமைப்பின் ஊடாக அனுமதியளிக்கப்பட்டவை தவிர்ந்த நிதி அல்லது ஏனைய நலன்களைப் பெற்றுத்தரக்கூடிய எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது என சட்டத்தரணிகள் கூட்டிணைவு வலியுறுத்துகின்றது-என்றுள்ளது. (எ-இ)

2024 (2025) O/L

மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு

வரலாறு

ஆசிரியர் RS. சந்திரன்

காலம் மார்ச் 08,09 சனி, ஞாயிற்றுக்கிழமை (காலை 8.00 மணி முதல் 1.00 வரை)

குறிப்புகள் :
- ஆர்வமுள்ள வெளிமாணவர்கள் கலந்து கொள்ள முடியும்.
- எதிர்பார்க்கை வினாக்களும் பாடக்குறிப்புக்களும் வழங்கப்படும்
- இலங்கைப்படம், உலகப்படம் இலகுவான முறையின் அடிப்படையில் குறித்துக் காட்டப்படும்
- கட்டணத்தைச் செலுத்தி கருத்தரங்கில் பங்குபற்ற முடியும்.

றோயல் அக்கடமி
அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0776649134
நிர்வாகம்

காணி விற்பனைக்கு

யாழ். கொக்குவில் பெற்பதி செருகப்புலம் வீதியில் 1 3/4 பரப்பளவு உறுதிக் காணி விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:
077 282 8175

தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:-
Whatsapp:- 0044 740 537 3526

(CS/57653) J-1

### 175 ஆண்டுகள் நிறைவு விழா காணும் யாழ். பத்திரிசியார் கல்லூரி (ST.Patricks College) அன்னையின் "பொன் அணிகளின் போர்" வாழ்த்து

ஒரு நூற்றாண்டு தாண்டி. இரு நூற்றாண்டை எட்டும் எம் பத்திரிசியார் கல்லூரிதனில் 175 வருடங்களாக நீர் செய்த சேவைதனில் அமெரிக்காவின் நாசா விஞ்ஞானி தொடக்கம் நம் நாட்டு வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், ஏன் அரிவரி ஆசிரியர் வரை எம் மாணவ கண்மணிகளை புடம் போட்டு எடுத்த அன்னையே புகழ் பாடும் எம் நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சிதனில் (1850 இல்) வெள்ளைக்கார பாதிரியார்களின் உருவாக்கத்தில் வந்த அன்னையே! அவ் வரிசையில் வந்த வெள்ளைப் பாதிரியார் (Rev.Fr.Long) பாதர் "லோங்" தன் கடைசிக் காலத்தில் யாழ் நூலகத்தை எமக்கு தந்தார். அவர்தம் சிலையை நூலகத்தின் முன்னால் காணும் போது பத்திரிசியார் அன்னையின் நினைவு.

"Big Match" என்று எம்மால் வியக்கப்படும் "பொன் அணிகளின் போர்" இன்று காணும் அன்னையே

நீவீர் வெற்றி வாகை சூட எங்கள் உளம் கனிந்த வாழ்த்துக்கள்.

பணிப்பாளர்,
பணியாளர்கள்,
வீனஸ் விசேட வைத்தியசாலை.

# மணிவிழா வாழ்த்து



### திரு கோபாலர் சிற்சபேசன்

(BSc, P.G.D in Ed, MSc, PGD in TESL)

06.03.2025


ஆசிரியர் பணியில்
32 வருடங்கள்
சேவையாற்றி
60 வது வயதில்
ஓய்வு பெறும்
தாங்கள் நல்ல
சுகத்தோடும்
நீண்ட ஆயுளோடும்
மனம் நிறைந்த
மகிழ்ச்சியோடும்
என்றென்றும்
இன்பமாய் வாழ
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள் :
உறவினர்கள், நண்பர்கள்,
முன்னாள் சக ஆசிரியர்கள் மற்றும்
பழைய மாணவர்கள்

(CS/57643) J-1

# மரண அறிவித்தல்

பிறப்பு 01 . 03 . 1933



இறப்பு 05 . 03 . 2025

### கந்தையா வள்ளியம்மை

காரைநகரைப் பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டை சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வள்ளியம்மை நேற்று (05.03.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், லோகேந்திரா (காசி களஞ்சியம்), சத்தியேந்திரா (விதானை), சாரதாதேவி (துங்கம்), காலஞ்சென்ற கல்யாணி (ஆத்தை) மற்றும் யோகேஸ்வரியின் (Arpico Insurance) அன்புத் தாயாரும், தனலட்சுமி, மகாதேவன், பத்மரஞ்சினி, சற்குணராசா, சுந்தரேஸ்வரன் (நல்லை குமரன் ரெக்ஸ், நல்லூர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிஷாந் (Keerthiga Pharmacy, Kaasi Trading (PVT)LTD), கிரிஷாந் (Luxmy Super market), கோபிகா (UK - லண்டன்), கீர்த்திகா (University of Jaffna), கஜவதனா (கிளிநொச்சி), கஜவதனி (வவுனியா), கார்த்திகா, நவநிலா (University of Jaffna), பவித்திரா (ATI), ஜனனி (யாழ்ரன் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ஈச்சமோட்டை சுண்டுக்குளியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
076 620 4189, 077 613 9019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.